

# எம்.ஆர்.டி. ரயில் சேவை

# மக்கள் நன்மையடைவர்

**கோலாலம்பூர், டிச. 15-**

பொது போக்குவரத்து அன்றாட தினசரி நிகழ்வாக இருப்பதனால் புதிய எம்ஆர்டி ரயில் சேவை திட்டம் மக்களின் வாழ்க்கை முறையை மாற்றி அமைக்க வழிவகுக்கும் என பிரதமர் டத்தோஸ்ரீ நஜீப் ரசாக் தெரிவித்தார். சுங்கை பூலோ- காஜாங் எம்ஆர்டி புதிய ரயில் சேவை உள்கட்டமைப்புத் திட்டம் மட்டுமின்றி ரயில் வாடிக்கையாளர்களையும் மக்களையும் கவனத்தில் கொண்டு வடிவமைக்கப்பட்டதாக அவர் தெரிவித்தார்.

பக்கம் 14

## எம்ஆர்டி ரயில்...

இது போன்ற பல விதமான திட்டங்கள் திட்டமிட்டு இருப்பதாகவும் சில திட்டங்கள் திட்டமிடப்பட்டு வருவதாகவும் அவரது வலைப்பதிவு நஜிப்ரசாக்.கோம் இல் பதிவிறக்கம் செய்திருந்தார்.

சுங்கை- பூலோ- காஜாங் எம்ஆர்டி ரயில் சேவையின் சுங்கை பூலோவில் இருந்து டாமான்சாரா வரையிலான முதல்கட்டம் இன்று அதிகாரப்பூர்வமாக பிரதமர் திறந்து வைப்பார். மேலும், அவரின் கீழ் இயங்கும் அரசாங்கம் இதுபோன்ற திட்டங்கள் அனைவருக்கும் பயனளிக்கும் வகையில் திட்டமிட வேண்டும் என அவர் தெரிவித்தார்.

அதோடு, நாட்டின் மேம்பாட்டிற்கு மக்களும் இணைந்து முயற்சிக்க வேண்டும் எனவும் இல்லையெனில் நாட்டின் நிலை பின் தங்கி விடும் என அவர் தெரிவித்தார். இந்த எம்ஆர்டி ரயில் சேவை திட்டம் இயக்க சக்தி மற்றும் முன்னோக்கிச் சென்று நவீன போக்குவரத்து துறைக்குக் கொண்டு செல்லப்படும் என அவர் தெரிவித்தார்.